# DEPOSITION OF WITNESS

(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2, SANKARI.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | : | C.C. 152/2025 | Date | : | 28.01.2026 |
| Deposition of Witness for | : | **அ.சா.4** | Taluk | : | |
| Name | : | **திருமதி. கிருஷ்ணவேணி** | Calling | : | |
| Father / Husband Name | : | **பழனிசாமி** | Religion | : | |
| Village | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 28.01.2026.

**(எதிரிகள் 1 முதல் 7 நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ளார்கள்.)**

**முதல் விசாரணை :**

1. நான் சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், இளம்பிள்ளை, வேலகவுண்டம்பாளையம்த்தில் வசித்து வருகிறேன். வீட்டு வேலை செய்து வருகிறேன். அ.சா.1 ரஞ்சித்குமார் எனது மகன் ஆவார். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 4 வருடங்களுக்கு முன்பாக என் பக்கத்து வீட்டிற்கு முன்பாக சுமார் 10, 20 நபர்கள் நின்று கொண்டிருந்தார்கள். அவர்கள் யார் என்று எனக்கு அடையாளம் தெரியவில்லை. சிறிது நேரம் கழித்து அந்த கூட்டத்தில் தள்ளுமுள்ளு ஏற்பட்டது அதில் எனது மகன் கீழே விழுந்து அவன் உடம்பில் அடிபட்டது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக அறிவிக்ககோரி அனுமதிக்கப்பட்டதின் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:**

கடந்த 08.01.2022ம் தேதி இரவு 07.00 மணியளவில் நடுவனேரி பேருந்து நிறுத்தம் அருகே ஜனேஸ், கோபி, கோகுல்ராஜ் மற்றும் பூமிநாதன் ஆகியோர் எனது மகன் ரஞ்சித்குமாரிடம் தகராறு செய்ததாகவும், பின்னர் அவர் எங்கள் வீட்டிற்கு வந்து அதை சொன்னதாகவும், அதன் பின்னர் இரவு 11.30 மணியளவில் ஆஜர் எதிரிகள் அனைவரும் வீட்டிற்கு வந்து கெட்ட வார்த்தையால் பேசியதாகவும், கதவை உடைத்து அடித்து கொலை மிரட்டல் விடுத்ததாகவும், அதை நேரில் பார்த்ததாகவும், போலிஸ் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. நானும் எதிரிகளும் தற்போது சமாதானம் ஆகிவிட்டோம் என்று சொன்னால் சரிதான்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கபட்டது.

**மறுவிசாரணை:–** இல்லை.

Witness- Sd/- Krishnaveni

Typed to my dictation in open court read over and explained to the witnesses in the presence of the accused and admitted by him to be correct.

Sd/- D. Sivakumar,
Judicial Magistrate No.II,
Sankari.